# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 7, 2022

Weekly E-paper ● May 7, 2022





# Popular front of India பயங்கரவாத இயக்கமா?

சுப.வீரபாண்டியன்

## எட்டிப் பார்க்கும் சமஸ்கிருதம்

மா.உதயகுமார்

## ஆளுநர் அதிகாரம் உள்பட...!

தலையங்கம்

## பல்லக்கைக் கூடவா தூக்க முடியவில்லை!


மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 7, 2022 Weekly E-paper ● May 7, 2022


## மே 7 – கால்டுவெல் பிறந்தநாள்





வடமொழிக் குடத்திற் குள்ளே
  வகைதொகை ஏது மின்றிக்
கடலென விரிந்தி ருக்கும்
  காவியத் தமிழைப் பொய்யாய்
அடக்கிட முயன்ற பூணூல்
  அறுந்தது கால்டு வெல்லால்
உடைந்தன பொய்கள் வானில்
  உயர்ந்தது தமிழர் மாட்சி!

அளவிலா மகிழ்ச்சி அந்த
  அறிஞனின் பிறந்த நாளில்
தளபதி தமிழ கத்தின்
  தனிப்பெரும் முதல்வ ரானார்!
வளமெலாம் பெற்றே நாடு
  வளர்ந்திட ஆட்சி செய்தார்!
கழகமும் திராவி டத்தின்
  கால்டுவெல் புகழும் வாழ்க!

–சுப. வீரபாண்டியன்

# Popular front of India பயங்கரவாத இயக்கமா?

### சுப.வீரபாண்டியன்



*Popular front of India* ஒரு பயங்கரவாத இயக்கம் என்று தமிழ்நாடு ஆளுநர் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாடு ஆளுநர் எப்போது இந்திய ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சர் ஆனார் என்று தெரியவில்லை. அப்படியே ஆகிவிட்டாலும் இப்படி ஓர் இயக்கத்தை பற்றிக் கருத்துத் தெரிவிப்பதற்குப் பொதுக்கூட்டம் அல்லது பொது நிகழ்வுதான் உரிய இடமா என்பது பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்றால் அதன்மீது இன்று வரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை, தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள் எத்தனை? பாஜக அரசு ஆட்சிக்கு வந்தே எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இத்தனை காலம் ஒன்றிய அரசு என்ன செய்தது? இந்த அமைப்பு ஆப்கானிஸ்தான், சிரியா போன்ற நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு எல்லாம் ஆட்களை அனுப்பி வைக்கிறது என்று ஆளுநர் குற்றம் சாட்டுகிறார். அதையெல்லாம் இந்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்ததா? இன்று வரையில் அந்த அமைப்பின் மீது அப்படி ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு நீதிமன்றத்துக்கு வந்து இருக்கிறதா?

ஓர் அமைப்பு பற்றி ஒரு அரசியல்வாதி பொது மேடையில் இப்படிப் பேசுவது கூட தவறானதாகும். ஆனால் பொறுப்பு மிக்க பதவியில் இருக்கும் ஆளுநர் எந்தச் சான்றையும் எடுத்துக் காட்டாமல், எந்த ஒரு நிகழ்வையும் குறிப்பிட்டுச் சொல்லாமல், பொத்தாம் பொதுவில் இந்த இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று சொல்லுவது எப்படி நியாயமாகும்? இது ஒரு மோசமான முன்னுதாரணம் ஆகிவிடாதா? எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பிடிக்காத அமைப்புகளுக்குப் பயங்கரவாத அமைப்புகள் என்று பெயர் சூட்டத் தொடங்கினால், இது எங்கே போய் முடியும்? ஆளுநர் தான் ஒரு ஆர்எஸ்எஸ்காரரர் என்பதை அடிக்கடி மெய்ப்பித்துக் கொண்டே இருக்கிறார். இஸ்லாமிய அமைப்புகள் கிறிஸ்தவ அமைப்புகள் எல்லாம் பயங்கரவாத அமைப்புகள் என்று ஒற்றை வரியில் சொல்லி விடுவார்கள் போலிருக்கிறது.

உண்மையான பயங்கரவாத அமைப்பு ஒன்றின் பக்கத்தில் நின்று கொண்டு ஆளுநர் மற்ற அமைப்புகளைப் பற்றி இப்படிப் பேசுகிறார் என்று எண்ணத்தோன்றுகிறது. திட்டமிட்டு இன்னொரு மத மோதலுக்கு வழிவகுப்பது போலவும் தெரிகிறது.



தேவையற்ற சிக்கல்களை உருவாக்கிக் கொண்டே இருப்பதன் மூலம் தேவையான சிக்கல்கள் குறித்தும், தீர்வுகள் குறித்தும் பேசுவதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது.

இப்படி நடந்துகொள்வது ஓர் ஆளுநருக்கு அழகில்லை. ●

# எட்டிப் பார்க்கும் சமஸ்கிருதம்

மா.உதயகுமார்

*"What is wrong with saffronising education?"*

"கல்வியைக் காவி மயமாக்குவதில் என்ன தவறு இருக்கிறது?"

என்று இந்திய ஒன்றியத்தின் துணைக் குடியரசுத் தலைவர் திரு.வெங்கையா நாயுடு அவர்கள் மார்ச் 19 அன்று ஹரித்துவாரில் நடந்த ஒரு நிகழ்வில் தெரிவித்தார்.

எனவே ஒன்றிய அரசு முன்னெடுக்கும் முயற்சிகள் எல்லாம் காவிமயமாக்கவே என்று அவர்களே ஒப்புக் கொண்டுவிட்டார்கள். அதனால் அவர்களிடம் பேச எதுவும் இல்லை. அவர்கள் தங்கள் இலக்கை நோக்கித் தெளிவாகப் பயணிக்கிறார்கள். பார்ப்பனரல்லாத மக்கள்தான் விழிப்புணர்வு பெற வேண்டும்.

கல்வி என்பது காவி மயமாகத்தான் இங்கே இருந்து வந்திருக்கிறது. கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகத்தான் கல்வியென்பது அனைவருக்கும் திறந்து விடப்பட்டிருக்கிறது. அதிலும் உயர்கல்வி, குறிப்பாக மருத்துவக் கல்வி என்பது இடஒதுக்கீட்டின் மூலம்தான் பார்ப்பனரல்லாத அனைத்துச் சமூகத்தினருக்கும் கிடைத்துவருகிறது. அதனைக் கெடுக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டதே நீட் தேர்வு.

மீண்டும் சமஸ்கிருதப் பண்பாட்டை மருத்துவத் துறையில் திணிக்க ஒன்றிய ஆட்சியின் கட்டுப்பாட்டில் செயல்படும் தேசிய மருத்துவ ஆணையம் தொடங்கியிருக்கிறது. மதுரை அரசு மருத்துவக் கல்லூரியில் தமிழக நிதியமைச்சர் பி.டி. ஆர். பழனிவேல் ராஜன், பத்திரப் பதிவு அமைச்சர் மூர்த்தி பங்கேற்ற விழாவில், இது வரை பின்பற்றப்பட்டு வந்த 'ஹிப்போகிரட்டிக்' உறுதிமொழியை மாற்றி 'மகரிஷி சரக சபதம்' என்ற சமஸ்கிருதத்தில் இருக்கும் உறுதி மொழியை ஆங்கில மொழி வழியாக உறுதி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது.



இரண்டு அமைச்சர்கள் கலந்து கொண்ட நிகழ்விலேயே சமஸ்கிருதத் திணிப்பைச் செய்பவர்கள், இன்னும் எத்தனை கல்வி நிலையங்களில், கல்லூரி நிகழ்ச்சிகளில் காவிச்சாயம் பூசிக்கொண்டிருப்பார்கள் என்பதை நினைத்துப் பார்த்தாலே, திராவிட இயக்கம் இன்னும் எவ்வளவு வேகமாக மாணவர்களுக்கிடையில் செயல்பட வேண்டும் என்பதை உணரலாம். ஆர்.எஸ்.எஸ். புள்ளிகள் ஒவ்வொரு அதிகாரக் கட்டமைப்பிலும் ஊடுருவி பார்ப்பனிய வேதக் கொள்கைகளை எப்படித் தந்திரமாக நுழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இந்த நிகழ்வும் ஒரு சான்று.

திராவிட இயக்கத்தின் அமைச்சர்கள் என்பதால் கடுமையான எதிர்ப்புப் பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதுவே வேறு மாநிலத்தில் நடந்திருந்தால் அவர்களும் சேர்ந்து பாரதப் பண்பாட்டின் புகழ் பாடியிருப்பார்கள்.

நீட் தேர்வின் மூலம் தேர்ச்சி பெற்று மருத்துவம் பயில வரும் மாணவர்களிடம் இது போன்ற காவிச் சிந்தனைகளை எளிதில் விதைத்துவிடலாம். மருத்துவக் கல்லூரிக்கு மனு போடுவதற்கு சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நடைமுறை, சென்னை மாகாணத்தில் நிலவியதையும், நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் பனகல் அரசர் முதல்வராக இருந்தபோதுதான் அது ஒழிக்கப்பட்ட வரலாற்றையும் நாம் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கும் போதுதான் அவர்கள் சமஸ்கிருதத்தில் இருக்கும் உறுதி மொழியின் ஆபத்தை உணர்வார்கள்.

"சமஸ்கிருதம் பரவினால்தான் பார்ப்பனர்கள் வாழ முடியும். சுரண்ட முடியும். நம்மைக் கீழ் ஜாதி மக்களாக ஆக்க முடியும். அவன் பிராமணனாக இருக்க முடியும். அதன் நலிவு பார்ப்பன ஆதிக்கத்தின் சரிவு என்று உணர்ந்து ஒவ்வொரு பார்ப்பனரும் சர்வ ஜாக்கிரதையோடும் விழிப்போடும் காரியம் செய்துவருகிறார்கள்" (விடுதலை 15.02.1960) என்று தந்தை பெரியார் கூறியதை மாணவர்களிடம் நாம் கொண்டு செல்ல வேண்டும்.

கல்லூரிகளில் பல்வேறு பெயர்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆர்.எஸ்.எஸ் மாணவர் அமைப்புகள் செயல்படுகின்றன. அந்த இடங்களில் திராவிட இயக்க மாணவர் அமைப்புகள் பெருக வேண்டும். பெரியார் பெயரில் அண்ணா பெயரில் படிப்பு வட்டங்கள் கல்லூரிகளில் செயல்பட வேண்டும்.

எட்டிப் பார்க்கும் சமஸ்கிருதப் பண்பாட்டை, முளையிலேயே வெட்டி எறியும் திராவிடம்!

•

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஆளுநர் அதிகாரம் உள்பட...!

உச்ச நீதிமன்றத்திடம் குட்டுக்கு மேல் குட்டு வாங்கும் ஒன்றிய அரசு இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவிக்கிறதா அல்லது அது நீதிமன்றத்தையே மதிக்கவில்லையா என்பது குழப்பமாகத்தான் இருக்கிறது.

பேரறிவாளனின் மனுவை 4 - 5 - 2022 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொண்டது உச்ச நீதிமன்றம்.

இந்த வழக்கின் விசாரணையை ஒன்றியக் குற்றப் புலனாய்வு விசாரித்தது. அதனால் குடியரசுத் தலைவர்தான் முடிவெடுக்க முடியும் என்று வழக்கம் போல் சொல்லிக் கொண்டு இருந்தார் ஒன்றிய அரசின் வழக்கறிஞர்.

அப்போது நீதிபதி அரசியல் சாசனப்படிதான் எல்லோரும் நடந்து கொள்ள வேண்டும்.

ஒன்றியக் குற்றப் புலனாய்வு விசாரித்து இருக்கலாம். ஆனால் இது கிரிமினல் வழக்கு. மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது.

இதில் ஒன்றிய அரசு எப்படித் தலையிட முடியும்?

மாநில அரசின் அறிக்கை மீது ஆளுநர் முடிவெடுக்க முடியாது. ஒப்புதல்தான் கொடுக்க முடியும்.

சிறையில் பேரறிவாளன் நன் நடத்தை சரியாக இருந்திருக்கிறது. அவரின் வயது, உடல் நிலையைக் கருதி இறுதி முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

அதே சமயம் குடியரசுத் தலைவரின் முடிவுக்காகக் காத்திருக்க முடியாது என்றார் நீதிபதி.

இறுதியாக இந்தப் பிரச்சனையில் நாங்கள் கண்மூடிக் கொண்டு இருக்க முடியாது. ஒன்றிய அரசு இது குறித்துப் பேச ஒன்றுமில்லையென்றால் நாங்கள், ஆளுநர் அதிகாரம் உள்பட இறுதி முடிவெடுக்க வேண்டிய நிலை வரும் என்று காட்டமாகக் கூறினார்கள்.

ஒன்றிய மோடி அரசுக்குத் தமிழ்நாடு, தமிழர்கள் என்றாலே பிடிக்காது. ஒதுக்கும், இழுத்தடிக்கும்.

ஆனால் எப்பொழுதும் சர்வாதிகாரமாக அப்படிச் செய்ய முடியாது என்பதை மீண்டும் உச்ச நீதிமன்றம் உறுதி செய்திருக்கிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## திராவிட இயக்கத் தமிழர் பேரவை

ஆனைமலை , பொள்ளாச்சி நகர ஒன்றியப் பகுதிளின் பொறுப்பாளர்களாகக் கீழ்கண்ட தோழர்கள் நியமிக்கப்படுகிறார்கள்:

பொள்ளாச்சி நகர அமைப்பாளர்,
தோழர் தமிழ் சுரேசு

ஆனைமலை நகரத் தலைவர்
தோழர் மனோஜ்

துணைத் தலைவர்
தோழர் இராகவன்

செயலாளர்
தோழர் ரகுபதி

துணைச்செயலாளர்
தோழர் சிறீதர்

நகர இளைஞரணி அமைப்பாளர்
தோழர் சசி

நகர மாணவரணி அமைப்பாளர்
தோழர் சூர்யா

ஆனைமலை ஒன்றிய அமைப்பாளர்கள்
தோழர் உதயகிரி
தோழர் பேச்சிமுத்து
தோழர் கதிர்.

ஆனைமலை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள்
தோழர் பிரதீப்
தோழர் நவீன்

சுப.வீரபாண்டியன்
(பொதுச் செயலாளர்)

கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் சிறப்புத் திட்டம்

மாதம் 5 புத்தகம்




இந்த அய்ந்து புத்தகத்தின் விலை ரூ ₹360

தள்ளுபடி விலை ₹250 கிடைக்கும்

தபால் செலவு தனி

கருஞ்சட்டைப் பதிப்பகம்

120, என்.டி.ஆர் தெரு, ரெங்கராசபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024

8122946408, Gpay - 9840336688 Ph: 044-24726408

Web: www.karunchattaibooks.com / Mail: karunchattaibooks18@gmail.com

# பல்லக்கைக் கூடவா துறக்க முடியவில்லை!

**மதிவாணன்**

பல்லக்குத் தூக்குகிறவர்கள் எதுவும் சொல்லவில்லை, பல்லக்கில் போறவருக்கும் சுமப்பார் குறித்து கவலை இல்லை. உனக்கேன் அக்கறை? யாருக்கும் இல்லாத அக்கறை?



இதற்குத் திருவள்ளுவரே தெளிவாகச் சொல்கிறார்.

"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை

பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை" - (குறள் 37)

மனிதனை மனிதன் சுமந்து செல்வது, இதை அறம் என்று சொல்லிவிடாதீர்கள் என்று அறத்துப்பாலில் உரைக்கிறார் வள்ளுவர். சகித்துக்கொள்வதும், தூக்கிச் சுமப்பதுவும் சரி எனப்போகும் மக்களிடம் சுயமரியாதை எண்ணத்தை விதைக்க வேண்டும் அல்லவா! உடன்கட்டை ஏறுதல், தேவதாசி ஒழிப்பு முறை, குழந்தைத் திருமண ஒழிப்பு என அரசு தலையிட்டது இல்லையா என்ன? இவற்றில் எல்லாம் பாதிக்கப்படுபவரை கேட்டுக் கொண்டா தலையிட்டது அரசு. தொடர்புடையவர்களே எதிர்த்த போதிலும், அரசு இவற்றிக்கு எதிராகச் சட்டம் இயற்றியது. சுயமரியாதைக்கு எதிரான இழிவான செயல்களை ஆதரிக்க இயலாது, அனுமதிக்கக் கூடாது.

முன்னதாக தருமபுர ஆதீனத்தின் பல்லக்கில் சுமந்து செல்லல் நிகழ்ச்சிக்குத் திராவிடர் கழகம் எதிர்ப்பு தெரிவித்து இருந்தது. இதைத் தொடர்ந்து மயிலாடுதுறை மாவட்ட வருவாய்த்துறைக் கோட்டாட்சியர் இந்த நிகழ்விற்கு அனுமதி மறுத்தார். பல்லக்கில் தூக்கிச் செல்வதைத் திராவிடர் கழகம் தொடர்ந்து எதிர்த்து வருகின்றது. பெரியாரின் அறிவுறுத்தலைத் தொடர்ந்து, மனிதனை மனிதன் சுமக்கும் பல்லக்குப் பயணத்தைக் கைவிட்டது சங்கரமடம். புதிய ஆதினம் தருமபுரத்தில் பொறுப்பேற்றதில் இருந்து மீண்டும் பல்லக்குத் தூக்கும் முயற்சிகள் நடைபெற, 2020-ஆம் ஆண்டு இது தொடர்பாக ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், மனித உரிமையைச் சிறுமைப்படுத்தும் நிகழ்ச்சியைப் புதுப்பித்து வருகிறார் என்ற தகவலை தெரிவித்து இருந்தார். இதனைத் தொடர்ந்து அந்த நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு இருந்தது.

பட்டினப் பிரவேசத்தில் பல்லக்குத் தூக்குவதை ஆதரிக்கும் அனைவரும் ஒரே குரலில் பேசவில்லை. ஒரு "நூல்" அளவில் நுண்ணிய வேறுபாடு உள்ளது. நானே சென்று பல்லக்கைத் தூக்குவேன் என்று சொல்லும் அண்ணாமலையும், மதுரை ஆதீனமும் நூலுக்கு இந்தப் பக்கம். நாங்கள் சுமப்போம் என்று சொல்லாமல் ஆதரிப்பதாகச் சொல்லும் மன்னார்குடி ஜீயர், ஹச்.ராஜா ஆகியோர் நூலுக்கு அந்தப் பக்கம். இதுதான் சனாதன வித்தியாசம்.

இதில் சோகம் என்ன என்றால், நூலுக்கு இந்தப் பக்கம் இருப்பவர்களிடம் ஒற்றுமையில்லை. அண்ணாமலை அவர்களுக்குப் பல்லாக்குக் கூட தூக்கக் கூட உரிமை இல்லை. இந்த அவமானம் அண்ணாமலைக்குத் தேவையா? அவரின் பேட்டி ஒன்றில் இந்து மதத்தில் சாதி இல்லை என்றும், 500 ஆண்டுகளாக நடைபெறும் மரபு என்றும் சொன்னார். அந்த மரபிலேயே சாதிதானே அவரைத் தடுக்கிறது. அண்ணாமலை அவர்களே இதைக் கூட கண்டுபிடிக்க தெரிவில்லை, எப்படி தான் IPS-ஆக பணியாற்றினீர்களோ! இந்த நிலையில் நீங்கள், கலைஞரை முட்டாளாக முதலமைச்சர் கருதுகிறாரா என்று கேள்வி கேட்கிறீர்கள்!

ஒரு திரைப்படத்தில் நடிகர் வடிவேலு "மங்குனி " என்று சொல்வார். அதுதான் இப்போது நினைவுக்கு வருகிறது.

மதுரை ஆதீனம், ஆளுநர் வருகைக்குப் பின்தான் இது போன்றவை நடைபெறுவதாக சந்தேகித்தார். மக்களுக்கும் அதே சந்தேகம்தான். ஆளுநர் வருகைக்குப் பிறகுதான் இது போல நின்று போய் இருந்த பழக்கங்கள் மீண்டும் தூசி தட்டப்பட்டுக் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவா என்ற ஐயம் ஏற்படுகிறது. மன்னார்குடி ஜீயர் அவர்கள் "அமைச்சர்கள் நடமாட முடியாது" என்று மிரட்டும் தொனியில் கருத்துத் தெரிவித்திருந்தார். இது ஒன்றும் வன்முறைக் களம் இல்லை. பின்னர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களுடனான நேரடி விவாதத்தில், கருப்புக் கொடி காட்டுவோம், கேள்வி கேட்போம் என்று பின்வாங்கிக் கொண்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி சட்டமன்றத்தில் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பல்லக்குத் தூக்கும் நிகழ்ச்சிக்குத் தடை விதிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். பல்லக்குத் தூக்குவது மரியாதை குறைவுக் கிடையாது எனவும், விருப்பத்தின் பெயரிலேயே பல்லக்குத் தூக்குகிறார்கள் என்றும் கூறினார். என்ன செய்ய, அவர்கள் கட்சியில் விருப்பத்தின் பெயரிலேயே குனிந்தும், தவழ்ந்தும் சென்று முன்னாள் தலைமைக்கு விசுவாசத்தைக் காட்டிப் பதவி பெறுவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார்கள். ஆகவே அவருக்கு இது தவறாக தெரியாமல் போகலாம்.

இது குறித்துச் சட்டமன்றத்தில் பேசிய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு அவர்கள் பட்டினப்பிரவேச நிகழ்வில் சுமுகமான முடிவு எட்டப்படும் எனவும், வரும் 22 ஆம் நாள் வரை காலம் உள்ளது எனவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதீனம் அவர்களுடன் பேசுவார், நல்ல முடிவு எட்டப்படும், விரைவில் அறிவிப்பார் என்றும் கூறினார்.

அனைத்துச் சாதியினர்களும் அர்ச்சகர் ஆகலாம் சட்டத்தை முதலமைச்சர் ஆதீனங்களை அருகில் வைத்துக்கொண்டுதான் சாதித்தார். மக்கள் மனம் கவர்ந்த முதலமைச்சராக அனைத்து விதத்திலும் விளங்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தச் சிக்கலிலும் நல்ல முடிவை எட்டுவார் என நாம் எதிர்ப்பார்க்கலாம்.

பார்ப்பனர் அல்லாத ஆதீனங்கள் மீதும் அவர்கள் தம் தமிழ் பணிகள் மீதும் எல்லோருக்கும் மதிப்பு உண்டு. பொதுவாக ஆசைகளைத் துறந்தே துறவி ஆவதாகச் சொல்பவர்கள், பல்லக்கைக் கூடவா துறக்க முடியவில்லை!

●

### நாலு பேர் தூக்கினால் போவேன்...

வெளிநாடுகளில், செவ்வாய்க் கோளுக்குப் போவோமா, இல்லை அதற்கு அப்பால் போவோமா, அப்படிப் போவதற்கு எப்படிப்பட்ட விண்கலம் செய்ய வேண்டும் என்று ஆலோசித்துக் கொண்டு இருக்கையில், நாலு பேர் என்னைத் தூக்கினால்தான் போவேன் என்று சொல்வதை விவாதிக்கும் நிலைமையில் நம்மைத் தள்ளுவது மதமும், மதத்தை வைத்து அரசியல் செய்யும் மடையர்களும்!

- வெற்றிச்செல்வன்
(முகநூலிலிருந்து)

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian